DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.160/2023**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -13 (LW -15)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.பழனிசாமி** | Caste | : | |
| Father Name | : | **திரு.நல்லியண்ணன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **24.10.2025.**

**PW -13 (LW -15 )**

(எதிரிகள் ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது தொட்டியம் தாலுகாவில் உள்ள சுள்ளியம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2021–ம் வருடம் காலை சுமார் 11.00 மணிக்கு என்னுடைய வயலில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். காட்டுபுத்தூர் போலீசார் என்னை அழைத்தனர். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். சுப்பிரமணியன் தோட்டத்தில் விசாரித்து கொண்டிருந்தார்கள்.

படம் வரைந்து கையெழுத்து கேட்டார்கள். அந்த இடத்தில் பச்சை கலர் துண்டு, அரக்கு மட்டை (தென்னை மட்டை) ஒன்றை போலீசார் எடுத்தனர். தற்பொழுது காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.9** ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல.

II ADDL COURT TRICHY

போலீசார் உங்கள் முன்பு படம் வரைந்து அந்த இடத்தை குறித்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

**எ.த.கு.வி:**

| | |
|---|---|
| **கேள்வி** | போலீசாரிடம் நீங்கள் ஒரு கையெழுத்து தான் செய்தீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | படம் வரைந்த பேப்பரில்தான் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அதில் என்ன படம் வரைந்திருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தீர்கள் என்றாலும்? |
| **பதில்** | தவறு. |
| **கேள்வி** | இந்த வழக்கில் இறந்து போன செல்லப்பனின் மகன் ரமேஷ் உங்களுடன் இன்றைய வழக்கு விசாரணைக்காக வந்துள்ளார் என்றால்? |
| **பதில்** | சரிதான். |

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 24.10.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/Thiru.S.Gopinathan,
இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி: 24.10.2025

III ADJ COURT, TRICHY